ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

# எக்கோஸ் இந்தியா

மே 2008 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 1 இதழ் 5

அன்பு சகோதர சகோதரிகளுக்கு,

வணக்கம். லக்னோவில் நடைபெற்றமதிப்பிற்குரிய மாஸ்டர் அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்களை நாமெல்லோரும் இன்னும் உணர்ந்துகொண்டும், நினைவு கொண்டும் இருப்பதுடன், வார்த்தைகளில் விவரிக்க இயலாத மாஸ்டரின் ஆன்மீக ஆசியில் இன்னும் மூழ்கியிருக்கிறோம். பண்டாராவைப் பற்றிய ஒரு சிறப்புத் தொகுப்பு, பல்வேறு மையங்களுக்கு மாஸ்டர் மேற்கொண்ட பயணங்கள், மீரட் ஆசிரமத்தை மாஸ்டர் துவங்கி வைத்தது, பல்வேறு பயிற்சி வகுப்புகள் மற்றும் சகஜ மார்க்க அறிமுகக்கூட்டங்கள் ஆகியவை இந்த இதழின் சில முக்கிய அம்சங்களாகும்.

இந்தியா முழுவதிலுமுள்ள நமது ஆசிரமங்களிலும், மையங்களிலும், ஐக்கிய நாடுகள் சபையுடன் எஸ்ஆர்சிஎம் இணைந்து நடத்தும் கட்டுரைப் போட்டியை, தற்போதைய முக்கிய விஷயமாகக் குறிப்பிடலாம்.

நவம்பர் இதழுக்கான செய்திக் கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 10.10.2008 ஆகும். தங்கள் பகுதியில் நடக்கும் நிகழ்ச்சிகள் பற்றிய செய்தி ஆக்கங்களை அவற்றிற்கான நிழற் படங்களோடு தங்கள் மண்டலப் பொறுப்பாளர் வழியாக அனுப்பி வையுங்கள்.

எக்கோஸ் இந்தியா செய்தி மடல் குழு






## மாஸ்டரின் 81 வது பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்கள் - லக்னோ

ஜூலை 20 ஆம் தேதியன்று கொல்கத்தாவிலிருந்து விமானம் மூலம் மாஸ்டர் வந்த கணத்திலேயே விழாவிற்கான சூழல் உருவாகி விட்டது. சுமார் 45,000 அப்யாசிகளும், குழந்தைகளும் உலகெங்கிலுமிருந்து லக்னோ ஆசிரமத்தில் குழுமினர். ஆசிரமம் ஐ.ஐ.எம் வளாகத்திற்கு அருகில் லக்னோவிலிருந்து 25 கி.மீ. தூரத்தில் ஹர்தோய் புறவழிச்சாலையில் அமைந்துள்ளது.

ஜூலை 23 அன்று சத்சங்கத்திற்குப் பிறகு புதுடில்லியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் திரு ராஜீவ் சந்திரன் அவர்கள் யூஎன்எம்டிஜி எனப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகள் திட்டத்தின்படி, மனித மதிப்பீடுகளான அமைதிக்காகவும், வளர்ச்சிக்காகவும், சமத்துவத்திற்காகவும், பின்தங்கிய மக்களின் குறிப்பாக பெண்களின் ஆற்றல் மேம்பாட்டிற்காகவும், ஐக்கிய நாடுகள் சபை எவ்விதமெல்லாம் செயலாற்றி வருகிறது என்பது பற்றி உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து மாஸ்டர், நினைவுகூறத்தக்க தன் உரையில், ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன், ஜாதி, மத, மொழி மற்றும் தேசியம் ஆகிய தடைகளைக் கடந்து மனிதர்களுக்கு மத்தியில் எவ்விதம் சகோதரத்துவத்தைக் கொண்டு வருகிறது என்பது பற்றிக் குறிப்பிட்டார். மிஷனால் ஏற்கனவே 2000 திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன. இது ஒரு புது மனித சமுதாயம் உருவாவதற்கு வழிகோலும் என்றார்.

பெண்களின் முன்னேற்றத்தை அன்பால் மட்டுமே கொண்டுவர இயலும் என்பதை மாஸ்டர் வலியுறுத்தினார். “அவர்களிடம் அன்பு கொள்ளுங்கள். அவர்களுக்கு வலுவூட்டுங்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளியுங்கள்” என்று கூறினார். இந்தியாவில் வெளியே செல்கையில் தங்கள் கணவன்மார்களுக்கு சில அடிகள் பின்னால் நடந்து செல்லும் பெண்கள், தங்கள் வீடுகளில் அரசிகளாக இருந்ததைக் குறிப்பிட்டுச் சொன்னார்!

ஜூலை 24 ம் தேதி, மாஸ்டர் தியானக் கூடத்திற்கு வருகையில், ராணுவ இசைஞர்களின் பாண்டு வாத்தியத்தில் பிறந்த நாள் பாடல் முழங்கியது. காலை சத்சங்கம் முடிந்தபிறகு 11 திருமணங்கள் நடந்தன. அங்கு நடந்த பக்தி பஜன்களும், பாடல்களும், கவிதை வாசிப்பும் மாஸ்டர் மீதான நம் அன்பை வெளிக்கொணர்ந்தது.

தியானக் கூட மேடையின் பின்னணித் திரையில் பாபூஜி மகராஜ் மற்றும் சாரிஜி ஆகியோரின் நிழற்படங்களின் கலவையோடு ‘என்றென்றம் ஒன்றிணைந்து’ என்றவாசகம் இவ்விழாவின் முதன்மைக் கருத்தாக அமைந்திருந்தது. மூன்று நாட்கள் நடந்த நிகழ்ச்சிகளில், 9 வெளிநாடுகளைச் சேர்ந்த ஜோடிகளின் திருமணங்கள் உட்பட, 36 திருமண விழாக்கள் நடைபெற்றிருந்தன. இந்த விழாவின் போது மாஸ்டர் பல புதிய நூல்களையும், சிடி மற்றும் டிவிடிக்களையும் வெளியிட்டார். மேலும் 5 டிவிடிக்களின் தொகுப்பான ‘ஹபுல்- பபுல்’, ஏற்கனவே வெளியிடப்பட்ட ‘அவர், ஹுக்கா மற்றும் நான்’ என்றடிவிடி தொகுப்பின் இரண்டாவது பாகமாக வெளியிடப்பட்டது.

பருவ கால மழையில் நனையாதிருக்க திடல்கள் அனைத்தும் மழை நீர் புகாத வண்ணம் அமைக்கபட்டிருந்ததால், அப்யாசிகள் எங்கும் பாதுகாப்பாக உணர்ந்தனர். இரவு பகல் பாராது உழைத்து இதை சாத்தியமாக்கிய விழா ஒருங்கிணைப்பாளர்களையும், தன்னார்வத் தொண்டர்களையும் மாஸ்டர் பாராட்டினார். அப்யாசிகளின் தங்கும் இடங்கள் பாதுகாவல், போக்குவரத்து, காலணிகளைப் பாதுகாத்தல், சுகாதாரம், மருத்துவப்பணிகள், திருமணப் பொறுப்புகள், உணவகங்கள், சமையலறைகள், உதவி அலுவல்கள், குழந்தைகளின் பராமரிப்பு, நீர் வழங்குதல் மற்றும் சுத்தம் செய்தல் ஆகிய பல்வேறு பொறுப்புகளை தன்னார்வத் தொண்டர்கள் சிறப்பாக கவனித்துக் கொண்டனர். வங்கி மற்றும் இணைய தள வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பார்வையாளர்களை சந்தித்தவாறும், உலகெங்கிலுமிருந்து வந்திருந்த மிஷன் பொறுப்பாளர்களுடன் மிஷனின் நிர்வாகப் பொறுப்புகள் குறித்து பரிசீலித்தவாறும் மாஸ்டர் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். மேலும் மிஷனின் செயற்குழுவுடன் மிஷனின் செயல்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து பரிசீலிப்பதிலும் மாஸ்டர் தன் நேரத்தை செலவிட்டார்.

2008 ஜூலை 25 ம் தேதி மாஸ்டரால் நடத்தப்பட்ட காலை சத்சங்கத்திற்குப் பிறகு விழா கொண்டாட்டங்கள் முறையாக நிறைவிற்கு வந்தன. அதன் பிறகு தெய்வீகப் பாடல்கள் பாடப்பட்டு மிஷனின் செயலாளலரான சகோதரர் யூ.எஸ். பாஜ்பாய் அவர்களின் நிறைவுரையோடு விழா முடிவுற்றது.







## மாஸ்டரின் பயணம் ஜூன் - ஆகஸ்ட் 2008

### பெங்களூர்

15-6-2008 ஞாயிறு அன்று மாஸ்டர் தனது இரு மாத ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு துபாயிலிருந்து பெங்களூருக்கு வந்தார். அவரை வரவேற்பதற்காக பெங்களூரில் இருந்தும், அருகாமை மையங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையிலான அப்யாசிகள் புதிய சர்வதேச விமான நிலையத்தில் குழுமியிருந்தனர்.

கட்டுமானப் பணிகள் நடந்துவரும் ('பரம் தாம்' என்று மாஸ்டர் பெயரிடத் தீர்மானித்திருக்கும்) லாலாஜி நிலையத்தில் சத்சங்கம் நடத்திவிட்டு மாஸ்டர் திருமணங்களையும் நடத்திவைத்தார். பின்னர், பெங்களூரில் கிழக்கு, தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் வசிக்கும் அப்யாசிகளின் வசதிக்காக அப்பகுதிகளில் மூன்று ஆசிரமங்கள் அமைப்பது குறித்துப் பேசினார். தன் சுருக்கமான உரையில், மாஸ்டர் சுய ஒழுக்கத்தின் தேவையை வலியுறுத்தினார். வெளிவரவிருக்கும், 'அவர், ஹுக்கா மற்றும் நான்' டிவிடி தொகுப்பின் இரண்டாம் பாகமான 'ஹபுல் பபுல்' தொகுப்பை அறிமுகப்படுத்தும் விதமாக ஒரு உரை வழங்கினார்.

ஜூன் 20 முதல் 26ம் தேதி வரை தங்கியிருந்தபோது, கர்நாடகாவின் பல மையங்களில் இருந்து தொடர்ச்சியாக அப்யாசிகள் வருகை புரிந்த வண்ணம் இருந்தனர். மாஸ்டர் எஸ்.எம்.எஸ்.எஃப் நூலக சந்தாதாரர் அட்டை வழங்கும் பணியைத் தொடங்கிவைத்தார். இந்த அட்டை வைத்திருக்கும் சந்தாதாரர்களால் எந்தவொரு எஸ்.எம்.எஸ்.எஃப் நூலகத்திலிருந்தும் நூல்களைப் பெற்றுப் படிக்க இயலும். இவ்வித நூலகங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள நூல்களின் நோக்கம் முக்கியமாக மதங்கள் மற்றும் ஆன்மீகத்தைப்பற்றி விரிவாக அறிந்துகொள்வதும், அவற்றின் மதிப்பைப் புரிந்துகொள்வதுமாகும் என மாஸ்டர் குறிப்பிட்டார்.

பிரான்ஸ் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு கிரெஸ்ட்டில் அமைக்கப்பட்டிருந்த 250 கிலோகிராம் எடையுள்ள மணியைக் குறித்த அனைத்து விவரங்களை யும் கேட்டறிவதில் அதிக ஆர்வம் காட்டிய மாஸ்டர், அதை முதலில் ஒலிக்கச் செய்து மகிழ்ச்சியுற்றார். பின்னர், ஜூன் 28 அன்று சென்னைக்குத் திரும்புகையில், சாலை வழியாக நாட்ராம்பள்ளி சென்று அன்றிரவு அங்கு தங்கினார்.

இரண்டரை மாத இடைவெளிக்குப் பின்னர் சென்னைக்கு வரும் தங்கள் அன்புக்குரிய மாஸ்டரைப் பார்ப்பதற்காக அங்கு குழுமியிருந்த பெரும் எண்ணிக்கையிலான அப்யாசிகள் அவருக்கு வரவேற்பு அளித்தனர். சாலைவழிப் பயணத்தால் மாஸ்டர் களைத்திருந்தபோதும், குடிலுக்குச் செல்லும்போது அப்யாசிகளுடன் பேசுவதில் தன் நேரத்தைச் செலவிட்டார்.

ஜூலை 6-ம் தேதி, காலை சத்சங்கத்திற்குப் பிறகு, 'அவர், ஹுக்கா மற்றும் நான்' நூலின் தமிழ் மொழியாக்கத்தை மாஸ்டர் வெளியிட்டார். அப்யாசிகளை சந்திக்க எப்போதும் நேரம் ஒதுக்கிய மாஸ்டர், லாலாஜி நினைவு ஒமேகா சர்வதேச பள்ளிக்கும் சென்று வந்தார்.













Bangalore



Naukuchiatal



Chennai

ஜூலை 14-ம் தேதி கொல்கொத்தாவுக்குப் பறப்பட்டுச் சென்றார். ஜூலை 18-ம் தேதி குரு பூர்ணிமா அன்று மாஸ்டருடன் இருப்பதற்காக, இந்தியா முழுவதிலுமிருந்தும் பல அப்யாசிகள் வந்திருந்தனர். ஜூலை 20-ம் தேதியன்று, மாஸ்டர், பிறந்தநாள் விழாவை முன்னிட்டு லக்னோ சென்றார். லக்னோ கொண்டாட்டங்கள் நிறைவுற்றபின்னர் ஜூலை 28-ம் தேதியன்று சாலை மார்க்கமாக ஷாஜஹான்பூர் சென்றார். அங்கு பாபூஜியின் இல்லத்திற்குச் சென்றஅவர் அங்கிருந்த சில அப்யாசிகளுக்காக சத்சங்கம் நடத்தினார். பிறகு ஆசிரமத்திற்குச் சென்று சத்சங்கம் நடத்திவிட்டு அப்யாசிகளுடன் சற்று நேரம் இருந்துவிட்டு மாலையில் ருத்ராபூருக்குப் புறப்பட்டார்.

ஜூலை 29-ம் தேதி மாலை 3-30 மணிக்கு சத்கோல் சென்றடைந்தவுடன், சற்று நேரம் அங்கு ஓய்வெடுத்துவிட்டு நௌகுச்சியாதல் என்றஇடத்திற்குச் சென்றார். 30-ம் தேதி காலை சத்சங்கத்தை நடத்திவிட்டு, அங்கு ஒரு அப்யாசி சகோதரர் பாடிய அழகான பாடலை ரசித்தார். சுருக்கமான இந்த சத்கோல் பயணத்திற்குப் பின் மீரட்டிற்குச் சென்றமாஸ்டர், செல்லும் வழியில் ருத்ராபூரிலும், முராதாபாத்திலும் தங்கிவிட்டுச் சென்றார்.



Satkhol



Shahjahanpur



Satkhol



Ghaziabad

## மீரட் ஆசிரம திறப்பு விழா

1-8-2008 அன்று சத்கோலில் இருந்து டில்லிக்குத் திரும்பும் வழியில் ஒரு சிறு குழுவினருடன் மாஸ்டர் மீரட் மையத்திற்குச் சென்றார். முராதாபாத்தில் காலை சிற்றுண்டியை முடித்துவிட்டு மீரட் ஆசிரமம் அமைந்துள்ள இடத்திற்குச் சென்றார். அங்கு புதிய தியானக்கூடமும் மாஸ்டர் குடிலும் திறப்பு விழாவிற்குத் தயாராக இருந்தன. ரிப்பனைக் கத்தரித்து, ஆசிரம பெயர் பொறித்த கற்பலகையைத் திறந்த மாஸ்டர், புதிய ஆசிரமத்தை பாபூஜி மகராஜிற்கு அர்ப்பணித்தார். 1500 அப்யாசிகள் கலந்துகொண்ட அந்நிகழ்வில், சத்சங்கம் நடத்தியபின்னர் மாஸ்டர் உரையாற்றினார். அதில், ராவணனின் மனைவியான மண்டோதரி, மீரட்டில் பிறந்ததாக நகைச்சுவையாகக் குறிப்பிட்டு, ராட்சக் குடும்பத்தின் ஒரு அங்கமாக விளங்கியபோதும், அவள் நல்ல பெண்மணியாக விளங்கினாள் என்றார். தன் உரையில் கீழ்க்கண்ட முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டார்.

- அமைதியைப் பராமரிக்க நாம் ஒரு தீர்மானம் மேற்கொள்ள வேண்டும். அது சண்டை சச்சரவுகளைக் குறைத்துவிடும்.
- அகத்தை அல்லது புறத்தை எதாவது ஒன்றைத்தான் வளர்க்க முடியும் - இரண்டும் சாத்தியமல்ல.
- குறைந்தபட்சம் எதைச் செய்யக்கூடாது என்பதையாவது நாம் தீர்மானிக்க வேண்டும்.
- நேர்வழியில் பொருள் ஈட்டுதலும், கணவன் மனைவிக்கு இடையிலான ஆன்மீக உறவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

மேலும், அப்யாசிகள் தங்கள் பெயர்களில் ஜாதிப்பெயர் இணைந்திருப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும், அது சட்டபூர்வமாக மாற்றம் செய்யப்பட்டு, மாஸ்டருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். ஒரு காலகட்டத்தில் பாபூஜி மகராஜ் தன் பெயருக்குப் பின்னாலிருந்த ஜாதிப் பெயரை விட்டுவிட்டார் என்பதையும் குறிப்பிட்டார். பின்னர் சாலை வழியாக மாஸ்டர் டெல்லிக்குப் புறப்பட்டார்.










## Publications புதிய வெளியீடுகள்




### ஹபுல் பபுல்

இத்தொகுப்பு இந்த ஆண்டிற்கான சிறப்பு வெளியீடாகும். 'அவர், ஹுக்கா மற்றும் நான்' டிவிடி தொகுப்பின் தொடர்ச்சியாக, இத்தொகுப்பு மாஸ்டரின் உரைகளை உள்ளடக்கி வெளியாகியுள்ளது.

மாஸ்டர் அதில், “நான் எல்லா அப்யாசிகளையும் நமக்காகக் காத்திருக்கும் அந்த இன்மைத்தன்மையின் அழைப்பிற்கு செவிசாய்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்மைத்தன்மை எனும் அந்த வரண்ட பாலைவனத்தில் எதுவுமே இல்லாதிருக்கிறது. காண்பதற்கு ஒன்றுமில்லை, பாராட்டுவதற்கு ஒன்றுமில்லை, ஆசைப்படுவதற்கு ஒன்றுமில்லை, சாதிப்பதற்கு ஒன்றுமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இழப்பதற்கும் ஒன்றுமில்லை.

அந்த அழைப்பிற்கு செவி சாய்க்காதவரையில், தாடி என்பது வெறும் தாடிதான், ஹுக்கா வெறும் ஹுக்காதான். புகை வெறும் புகைதான். ஆனால் நமக்கு அது 'ஹபுல் பபுல்' ஆக இருக்க வேண்டும்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

5 டிவிடிக்கள் கொண்ட இத்தொகுப்புடன், மாஸ்டரின் உரைகளை உள்ளடக்கிய புத்தகம் ஒன்றும் அழகானதொரு உறையில் வைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

### டிவிடி தொகுப்பு ஜூலை 2008



2005 முதல் 2007-ம் ஆண்டு வரை, டென்மார்க்கில் உள்ள வ்ராட்ஸ், சென்னை, பெங்களூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் மாஸ்டர் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பாக இந்த ஜூலை 2008 டிவிடி தொகுப்பு வெளியாகியுள்ளது.

### ஹிந்தி வெளியீடுகள்



மாஸ்டரின் உரைகளை உள்ளடக்கிய 2 குறுந்தகடுகள் லக்னோ விழாவின்போது வெளியிடப்பட்டன. மாஸ்டரின் ஹிந்தி சொற்பொழிவுகளின் முதல் பாகத்தில், 1985 முதல் 1996 வரை மாஸ்டர் ஆற்றிய பதினான்கு உரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

பிரேம் ஹீ ஈஸ்வர் ஹை (அன்பே கடவுள்) என்றதலைப்பிலான இன்னொரு வீடியோ குறுந்தகட்டில் 1993 முதல் 1994 வரை மாஸ்டர் காஸியாபாத், கோட்டா, பெஹஜ் மற்றும் இந்தூர் ஆகிய இடங்களில் ஆற்றிய உரைகள் இடம்பெற்றுள்ளன.

### 'மாஸ்டர்ஸ் சாய்ஸ்'

'மாஸ்டர்ஸ் சாய்ஸ்' என்றசிடி தொகுப்பு, இசைத் தேர்ச்சி பெற்ற நமது சகோதர, சகோதரிகளின் பாடல்கள் அடங்கிய தொகுப்பாகும். அவர்களது பாடல்கள் அடங்கிய 2 சிடிக்கள் இத்தொகுப்பில் உள்ளன.

### இதயவாக்கு 2007




2007-ம் ஆண்டில் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் மாஸ்டர் ஆற்றிய ஆங்கில சொற்பொழிவுகள் அனைத்தும் இந்நூலில் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. 2006 மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளில் அப்யாசிகளுடன் மாஸ்டர் நிகழ்த்திய உரையாடல்களின் ஒரு பிரிவும் இதில் அடங்கியுள்ளது.

## உத்தராகண்ட், நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக்கல்வி - ஆசிரியர் பயிற்சி வகுப்பு

டேராடூன் ஆசிரமத்தில் ஜூன் 28-29 அன்று நடந்த இப்பயிற்சி முகாமில் உத்தராகண்டிலிருந்து 70 அப்யாசிகளும், உத்தரப் பிரதேசத்திலிருந்து 9 அப்யாசிகளும் கலந்து கொண்டனர்.

உத்தராகண்ட் மண்டலப் பொறுப்பாளர் சகோ. எம்.எல்.மித்தல் வரவேற்புரை ஆற்றினார். நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வியின் பின்னணி பற்றி சகோதரி நீரா ரகுவன்ஸி விளக்கிப் பேசியதுடன், இக்கல்விமுறைபற்றி ஆசிரியர் கையேடு ஒன்றை ஸ்மிருதி வெளியிட்டிருப்பது குறித்து குறிப்பிட்டுப் பேசினார்.

டேராடூன் மையத்தின் சகோ. ஆர்.எஸ். சௌஹான், மாநில அரசு பள்ளிகளில் விபிஎஸ்இ கல்வித்திட்டத்தைக் கொண்டுவர அனுமதித்துள்ளது பற்றியும், அதனால் இதில் அப்யாசிகளுக்கு பயிற்சியளித்து அவர்களை ஆசிரியர்களாக ஆக்கவேண்டியதன் தேவை பற்றியும் குறிப்பிட்டுப் பேசினார்.

சகோதரிகள் சந்திரகாந்தா மற்றும் ப்ரீத்தி ஆகியோர், பள்ளிகளில் இக்கல்விமுறையை எவ்விதம் நடத்துவது என்பது பற்றி உபகரணங்கள், கதைகள், உதாரணங்களைக் கொண்டு அளித்த செயல் விளக்கங்கள் இப்பயிற்சியின் முக்கிய அம்சமாகும். சகோதரர்கள் ஜி.டி. ஸரீன் மற்றும் ரமேஷ் தலகோட்டி ஆகியோரும் பயிற்சியாளர்களாக இம்முகாமில் பங்கேற்றனர்.

தேநீர் இடைவெளிக்குப் பிறகு, குழு செயல்பாட்டுப் பணிகள் துவங்கின. இதில் கீழ்க்கண்ட 4 குழுக்கள் அமைக்கப்பட்டன.

**முதல் குழுவில்** வகுப்பறைகளில் விபிஎஸ்இ-யை கற்பிக்க விரும்பும் தன்னார்வத் தொண்டர்களும்,

**2ம் குழுவில்** விபிஎஸ்இ பற்றி பள்ளி ஆசிரியர்களுடன் உரையாட விரும்பும் தன்னார்வத் தொண்டர்களும்,

**3ம் குழுவில்** பள்ளி ஆசிரியர்களுக்கும், அப்யாசிகளுக்கும் விபிஎஸ்இ பற்றி பயிற்சியளிக்க விரும்பும் தன்னார்வத் தொண்டர்களும்,

**4ம் குழுவில்** கல்வி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பாளர்களுக்கு விபிஎஸ்இ பற்றி எடுத்துரைக்க விரும்புவோரும் இடம் பெற்றிருந்தனர்.

மேற்கண்ட குழுக்களில் இடம் பெற்றிருந்த ஒவ்வொரு அப்யாசிக்கும் ஒரு நடுவர் குழு மற்றும் மற்றவர்கள் முன், தங்களது பங்கு பற்றி விளக்க சில நிமிடநேர வாய்ப்பு அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியை நிறைவுசெய்யும் பொருட்டு உத்தராகண்ட் மண்டலப் பொறுப்பாளர் சகோ. எம்.எல்.மித்தல் வந்திருந்த பயிற்சி ஆசிரியர்களுக்கும், பங்கேற்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்ததுடன், இதில் கலந்துகொண்ட அனைவரும் விபிஎஸ்இ தொடர்பான பணிகளை மாஸ்டர் விரும்புவதுபோல் முன்னெடுத்துச் செல்வார்கள் என்று, தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.





## கட்டுரைப் போட்டி

2005ம் ஆண்டிலிருந்து ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன், ஐக்கிய நாடுகளது தகவல் துறையின் அரசு சார்பற்றஒரு நிறுவனமாக இணைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பொதுமக்கள் குறித்த தகவல்களைப் பரப்புதல், ஐ.நா. சபையின் குறிக்கோள்கள், அதன் செயல்பாடுகள் மற்றும் உலக அளவிலான பிரச்சினைகள் ஆகியவற்றைக் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துதல் ஆகிய பொறுப்பு மிஷனிற்கு ஏற்பட்டுள்ளது.

ஆகஸ்டு 12ம் தேதி ஐக்கிய நாடுகள் அகில உலக இளைஞர் தினமாக அனுசரிக்கப்படுகின்றது. அதையொட்டி நமது மிஷன் நாடு முழுவதிலுமுள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் அகில இந்திய கட்டுரைப் போட்டி ஒன்று நடத்துகிறது.

17லிருந்து 24 வயது வரையிலான இளைஞர்களுக்கு சுயமரியாதையும் தன்னம்பிக்கையும் நற்பண்புகளை வளர்க்க உதவும்ணி என்ற தலைப்பிலும் 10லிருந்து 16 வயது வரையிலமன சிறுவர்களுக்கு உண்மையே துணிவுணி என்ற தலைப்பிலும் கட்டுரை எழுத ஏற்பாடு செய்துள்ளது. கட்டுரை எழுதுவதற்கான கடைசி நாள் 31 ஆகஸ்டு 2008 ஆகும்.

### குல்பர்கா, கர்நாடகா



குல்பர்கா ஆசிரமத்தில் மாஸ்டரின் குடிலுக்கு முன்னால் இருக்கும் திறந்த வெளியில் 2008 ஜூலை 6-ம் தேதியன்று அப்யாசிகளின் குழந்தைகளுக்கு ஒரு கட்டுரைப்போட்டி நடத்தப்பட்டது. அதற்கான தலைப்பு, 'சகஜ மார்க்கத்தில் சேர்ந்த பின்னர், தங்கள் பெற்றோர்களிடமும், உறவினர்களிடமும் குழந்தைகள் கண்ட மாற்றங்கள்' என்பதாக இருந்தது. பல்வேறு வயதுடைய 11 குழந்தைகள் இப்போட்டியில் கலந்துகொண்டனர். இது ஒரு சிறு ஆரம்பமேயாகும். குழந்தைகளுக்கு ஒரு ஓவியப்போட்டி நடத்தும் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது.

### நஞ்ஜங்கூடு, கர்நாடகா

மைசூருக்கு அருகிலுள்ள கோயில் நகரமான நஞ்ஜங்கூட்டைச் சேர்ந்த அப்யாசிகள், அகில இந்திய கட்டுரைப்போட்டியில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்வதற்காக உள்ளூர் பள்ளிகளுக்குச் சென்றது ஒரு புத்துணர்வூட்டும் அனுபவமாக அமைந்தது. அவர்களது ஆர்வமிக்க பணியால், 13 பள்ளிகளைச் சேர்ந்த 105 மாணவர்கள் 2008 ஜூலை 13-ம் தேதி நடந்த கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டனர். ஆசிரியர்களாக இருக்கும் உள்ளூர் அப்யாசிகள் கட்டுரைகளைத் திருத்தி, பரிசுகளுக்கான கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து, சகஜ மார்க்க நூல்களை அவர்களுக்குப் பரிசளித்தனர்.




## மையத்தின் வளர்ச்சியில் நாம் எவ்வாறு பங்கேற்பது?

இந்தக் கேள்வி இந்தோர் மைய அப்யாசிகளிடம் 10 .08. 2008 அன்று கேட்கப்பட்டது, சமீபத்திய லக்னௌ விழாவில் கலந்து கொண்டது அவர்களது உற்சாகத்தை இன்னும் தூண்டிவிட்டிருக்கக்கூடும். 125 பேர் உற்சாகத்துடன் இந்தத் தலைப்பை விவாதித்தனர்.

"வளர்ச்சி" என்பதன் அர்த்தம் என்ன? அப்யாசிகளின் எண்ணிக்கையைவிட ஒவ்வொருவரின் தனிப்பட்ட வளர்ச்சியையும், அவரின் தன்மைமாற்றத்தையுமே அது குறிக்கிறது. தன்னார்வத் தொண்டின் மூலமாக நாம் வளர்ச்சியடைகிறோம். "மையம்" என்பது, நமது வளர்ச்சி உள்ளூர் மையத்திலிருந்து பிரபஞ்சத்திற்கு விரிவடைதாகும்.



இறுதியில் "நாம் உண்மையாகவே முன்னேற, அவர் நம்மீது ஆற்றும் பணியில் நமது மனித மனோசக்தியால் எந்தவொரு எதிர்ப்பையும் உருவாக்காமல், நிபந்தனைகள் எதுவுமின்றி அவருக்கு ஒத்துழைத்து அவருக்குக் கீழ்ப்படிவதுதான் நமது பங்கு" என சுருக்கமாகத் தொகுத்துரைக்கப்பட்டது.

## தலைமையேற்று நடத்தும் திறமைகள் – ஆக்கப்பூர்வ பயிற்சி முகாம்

வடோதரா ஆசிரமத்தில், 22 ஜூன் 2008 அன்று, புதுமையைப் புகுத்தவல்ல பயிற்சி முகாம் ஒன்று, ஈடுபாடு மிக்க தன்னார்வ தொண்டர்களுக்காக நடைபெற்றது. அதை மூன்று பிரிசெப்டர்கள் உள்பட 25 அப்யாசிகளுக்காக, தொழிற்சாலையிலிருந்து வந்திருந்த தொழில் ரீதியான ஒரு பயிற்சியாளர் நடத்தினார்.

திறமையான தகவல் தொடர்பு, பிரச்சினையை ஆக்கப்பூர்வமாக தீர்த்தல், தலைமைப் பொறுப்பேற்கும்போது, பணி மற்றும் பணியாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு சூழ்நிலைக்கேற்ப செயல்படுதவதற்கான திறன் போன்றவை விவரிக்கப்பட்டன. இம்மைக்குரிய பிரச்சினைகளாகத் தோன்றுபவைகளைத் தீர்த்தல், அவற்றைத் தீர்க்கும்போது ஏற்படும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்தல், அவற்றால் கற்றுக்கொண்ட பாடங்களை கிரகித்துக் கொள்ளுதல் ஆகியவற்றைப் பற்றி பங்கேற்றவர்கள் ஆக்கப்பூர்வமாக சிந்திக்கும்படி விடப்பட்டனர். மாபெரும் விழாக்கள் உள்பட, மிஷனின் பல்வேறு நடவடிக்கைகளில் தன்னார்வ தொண்டர்கள் பங்கேற்கும்போது அவர்கள் தலைமையேற்று நடத்த வேண்டிய சூழ்நிலைகளை, கலந்து கொண்டவர்கள் அனைவரும் விவாதிக்க முயற்சித்தனர்.



## அகமதாபாத்தில் இளைஞர்களுக்கான சிறப்பு பயிற்சி



'உற்சாகமே வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது'' என்கின்றவிஷயம்தான், மண்டல அளவிலான ஒருநாள் நிகழ்ச்சியின் தலைப்பாக இருந்தது. அதில் குஜராத்திலிருந்து 45 இளம் அப்யாசிகள் 22 ஜூன் 2008 அன்று கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அப்யாசிகளை ஐந்து குழுக்களாகப் பிரித்து, குறுநாடகம், குழு விவாதங்கள், சீட்டு எடுத்து பேசுதல், கேள்வி பதில் போன்று பல நிகழ்ச்சிகள் பிரிசெப்டர்களால் வழிநடத்தப்பட்டன. இறுதியாக கலை நிகழ்ச்சியும் அதைத் தொடர்ந்து உணவும் அளிக்கப்பட்டது.

இதில் குறிப்பிடும்படியான விஷயம் யாதெனில், நிகழ்ச்சிக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட தலைப்புடன், ஆர்வமும் உற்சாகமும் அந்த நாள் முழுவதும் அந்த மண்டபத்தில் நிறைந்திருந்ததேயாகும். நிகழ்ச்சியை நடத்திய மூத்த அப்யாசிகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

## நெய்வேலியில் (தமிழ்நாடு) ஆன்மீகக் கூட்டம்

நெய்வேலி, பழுப்பு நிலக்கரி சுரங்கங்களுக்குப் பெயர்போனதாகும். இங்கு மிஷனின் மையம், 29 ஜூன் 2008 அன்று, ஒரு நாள் நிகழ்ச்சி ஒன்றைஅப்யாசிகளுக்காக நடத்தியது. உள்ளூர் மற்றும் அருகிலுள்ள மையங்களான கடலூர், பண்டிச்சேரி, விழுப்புரம் விருத்தாசலம் மற்றும் பண்ருட்டியிலிருந்து சுமார் 140 அப்யாசிகளும், 15 குழந்தைகளும் இதில் கலந்து கொண்டனர்.
மூன்று 'எம்' கள் பற்றிய வினாவிடையைத் தொடர்ந்து அப்யாசிகள் அன்பு, சகிப்புத்தன்மை, பொறுப்புடன் கூடிய ஈடுபாடு, சகோதரத்துவம் எனும் தலைப்புகளில் சிறு சொற்பொழிவுகளை ஆற்றி, தங்கள் கருத்தார்வத்தையும், ஈடுபாட்டையும் வெளிப்படுத்தினர். அப்யாசிகளால் நடத்தப்பட்ட குறுநாடகத்தைத் தவிர, ஒரு அப்யாசி தம்பதியினரிடம், "அவர்களின் குடும்ப வாழ்க்கையில் சகஜ மார்க்கத்தின் தாக்கம்" பற்றிய பேட்டி நடைபெற்றது. அது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான திறன்மிக்க வழியாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக சத்சங்கம் என்பதன் அர்த்தம் பற்றி இரு அப்யாசிகள் உரையாற்றினர். அதைத் தொடர்ந்து விவாதங்களும், தெளிவான விளக்கங்களும் இடம் பெற்றன.





## பயிற்சி முகாம்கள்

### தன்பாத்

கொல்கத்தா, ராணிகஞ்ச், தன்பாத், சிந்த்ரி, பொகாரோ மற்றும் கிரிடீஹ் - லிருந்து 80 அப்யாசிகள் 2 நாள் நிகழ்ச்சியாக ஜூன் 28, 29 தேதிகளில் கலந்து கொண்டனர். தன்பாத்தின் மையப் பொறுப்பாளர் சகோ. ஒய்.பி.கே. மூர்த்தி அவர்களுக்கு, மற்றமையங்களிலிருந்து வந்திருந்த பிரிசெப்டர்களும், தன்னார்வத் தொண்டர் அப்யாசிகளும் உதவினர்.

முதல்நாளின் முக்கிய அம்சம், சுத்திகரிப்பு தியானம் மற்றும் பிரார்த்தனை பற்றிய உரையாகும். மாலையில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. சகஜ மார்க்கம் ஒரு வாழ்க்கைமுறை என்பது விவாத தலைப்பாக இருந்தது. பிரசெப்டர்களின் சொற்பொழிவைத் தொடர்ந்து, சுவாரஸ்யமான ஒரு சகஜமான கலந்துரையாடல், பிரசெப்டர்கள் மற்றும் வந்திருந்த பார்வையாளர்களுக்கு இடையே நடைபெற்றது.

இரண்டாவது நாள் கேள்வி பதில் பிரிவு நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து 'சகஜ மார்க்கத்தில் சேர்வதற்கு முன்பும், பின்பும்' என்கின்றதலைப்பில் குழு விவாதம் நடைபெற்றது. அப்யாசிகள் தங்கள் இதயத்திலிருந்து பேசியதால் குழு விவாதம் மிகவும் பயனுள்ளதாகவும், வெற்றிகரமாகவும் இருந்தது. அவர்களது அனுபவங்கள் அற்புதங்கள் நிறைந்ததாகவும், சகஜ மார்க்கப் பயிற்சிமுறையில் நாம் சேர்ந்த நாளிலிருந்தே எல்லா சூழ்நிலைகளிலும் மாஸ்டர் நம்முடன் இருக்கிறார் என்கின்ற உண்மையை உள்ளடக்கியதாகவும் இருந்தது.

### தின்சுகியா




தின்சுகியா ஆசிரமத்தில் தின்சுகியாவிலிருந்தும், அருகிலுள்ள திப்ருகட், ஸிபசாகர், நாஜிரா, டிக்பாய், டூம்டுமா, நஹர்கடியா துலியஜன் மற்றும் அருணாசல் மையங்களிலிருந்து ஜூன் 29 ம் தேதி 200க்கும் மேற்பட்ட அப்யாசிகள் அப்யாசி பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

மாஸ்டரின் வேதனை, நல்லொழுக்கம், சகஜ மார்க்க பயிற்சி (சாதனா) ஆகிய தலைப்புகளில் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டு, பின்னர் கேள்வி பதில்கள் தொடர்ந்தன. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் சகோ. அசோக் ஸென்குப்தா "நாம் எதைப் பெற்றாலும் அதை மற்றவர்களுக்கு விநியோகித்து விடவேண்டும்" என்றமாஸ்டரின் போதனையை மேற்கோள் காட்டினார். கோவாவில் சமீபத்தில் மாஸ்டர் ஆற்றிய சொற்பொழிவையும்கூட எடுத்துரைத்து, ஒவ்வொரு அப்யாசியும் ஒரு வருடத்தில் ஒரு புதிய அப்யாசியைக் கொண்டு வந்தால் அந்த மையம் சுலபமாக வளர்ச்சியடையும் என்றார்.

புகைப்படங்களின் மூலம், பாபூஜி மகராஜ் தின்சுகியாவிற்கு பலமுறை வந்தது சிறப்பிக்கப்பட்டது. அவர் இந்த இடத்தைப் பற்றி கண்ட கனவை நாம் இதுவரை நிறைவு செய்யவில்லை என்றும், ஆனால் இந்தப் பணியை நாம் இங்கேயே இப்போதே மேற்கொண்டால், மாஸ்டரின் அருளாசியால் அவருடைய கனவை நிறைவேற்றுவது சாத்தியம் என்றும் அவர் கூறினார்.

### குல்பர்கா

புதிய அப்யாசிகளுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம், குல்பர்கா ஆசிரமத்தில் ஜூலை 6ம் தேதி நடத்தப்பட்டது. 25 அப்யாசிகள் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சகஜ மார்க்கப் பயிற்சியின் அடிப்படைகளை நன்கு புரிந்துகொள்வது பற்றி இதில் வலியுறுத்தப்பட்டது. சொற்பொழிவுகளுக்குப் பிறகு, கேள்வி பதில் விளக்கங்களுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



### தில்லி மையத்தில் இளைஞர் பயிற்சி முகாம்

6 ஜூலை 2008 அன்று பயிற்சி முகாமில் கலந்து கொண்ட தில்லி அப்யாசி இளைஞர்களுக்கு அது ஒரு புதிய மற்றும் புத்துணர்வு ஊட்டும் அனுபவமாக இருந்தது. விவாத தலைப்பு, நீங்கள் எதை சாதிக்க வேண்டுமானாலும் அது 'இங்கே இப்போதே' என்பதாகும். முகாமில் கலந்து கொண்டவர்கள் 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒருங்கிணைப்பாளர்களால் வழிநடத்தப்பட்டனர். குழுக்களில் விவாதிக்கப்பட்ட தலைப்புகள், சமநிலை, அன்பு, பற்றுறுதி, பொறுமை, மனோசக்தி, 'இங்கே, இப்போதே', ஒழுங்குமுறைகட்டுப்பாடு, காலம் என்பவையாகும். கலந்து கொண்ட இளைஞர்கள் சுவாமி விவேகானந்தரின் வீர முழக்கமாகிய 'எழுமின் விழுமின்' என்கின்ற வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு சுவாரஸ்யமான குறுநாடகத்தை நடித்துக் காட்டினர்.

பொருள்சார்ந்த நாகரீக உலகின், குறிக்கோள்கள் மற்றும் லட்சியங்களுக்கு ஆசைப்பட்டு அதற்கு அடிமையாவதால் ஏற்படும் ஆன்மீக ஆபத்துக்களை இளைஞர்களுக்கு எச்சரிக்கை செய்யும் மாஸ்டரின் சொற்பொழிவுகள் எடுத்துரைக்கப்பட்டு, பின்வரும் கோட்பாடுகள் வலியுறுத்தப்பட்டன. அதாவது, பாகுபடுத்திக்காட்ட அறிவாற்றல் உள்ளது. மனதை, பகுத்தறிந்து பார்க்கவும், ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டுடன் இருக்கவும் பயன்படுத்த வேண்டும். வாழ்க்கையில் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும், உயரிய வகை பணியை மேற்கொள்ள முயற்சி செய்து, ஆன்மீகத்திற்கு முதல் இடம் அளித்து அன்றாட வாழ்க்கையை நடத்த வேண்டு ம்.

### சிலிகுரி

சிலிகுரியிலிருந்தும், அதற்கு அருகிலுள்ள ராய்கஞ், டார்ஜிலிங், பிஜோன்பரி மற்றும் கேங்டாக் மையங்களிலிருந்தும் பயிற்சி முகாமிற்கு வருகை புரிந்திருந்த 50 அப்யாசிகளுக்கு சகஜ மார்க்க பயிற்சிமுறையைப் புரிந்து கொள்வது விளக்கப்பட்டு, அவர்கள் மனதில் அது ஆழப்பதியும்படி செய்யப்பட்டது. சிலிகுடியிலுள்ள ரிஷி பவனில், ஜூன் 2008, 7, 8 தேதிகளில், சகஜ மார்க்கப் பயிற்சி முறையைப் பற்றி இரண்டு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. தனி அமர்வு தியானங்கள், சத்சங்கங்களைத் தவிர அன்றாடப் பயிற்சி, நிலையான நினைவு மற்றும் 10 நியமங்கள் பற்றி விளக்கங்கள் அளிக்கப்பட்டன. புதிய அப்யாசிகளின் சந்தேகங்களும், குழப்பங்களும் தெளிவுபடுத்தப்பட்டதால், அவர்கள் இந்த முகாமை மிகவும் பயனுள்ளதாக உணர்ந்தனர். இப்படிப்பட்ட முகாம்கள் அவ்வப்போது நடைபெறவேண்டுமென்று பல அப்யாசிகள் கருத்துத் தெரிவித்தனர்.

## வரவேற்புக் கூட்டங்களின் தொகுப்புகள்

### திப்ருகர்

28 ஜூன் 2008 அன்று சகோ. டூங்கர்மல் அகர்வால் அவர்கள் திப்ருகர் மையத்தில் ஒரு வரவேற்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். 33 பேர் வந்திருந்தனர். அவர்களில் ஒன்பது பேர் உடனடியாக தியானப்பயிற்சியை ஆரம்பித்தனர். மேலும் சிலர் பயிற்சியை விரைவிலேயே ஆரம்பிப்பதாகக் கூறினர். வரவேற்புக் கூட்டம், கௌஹாத்தி மைய சகோதரர் அசோக் சென்குப்தாவால் நடத்தப்பட்டது.

### நந்தியால், ஆந்திரப்பிரதேசம்

நந்தியாலிலுள்ள முனிசிபல் உயர்நிலைப் பள்ளியில், ஜூன் நான்காம் தேதியிலிருந்து எட்டாம் தேதிவரை, 150 ஆசிரியர்களை மூன்று தனித்தனி குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு யோகம் மற்றும் தியானம் குறித்து பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மன அழுத்தமின்றி சமநிலையான வாழ்க்கையை நடத்துவது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது.

நந்தியாலிலுள்ள புல லோஜி ராவ் கல்லூரியில், ஜூன் 26ம் தேதி சகஜ மார்க்க தியானப் பயிற்சி முறை ஆசிரியர்களுக்கு எவ்வகையில் பயனளிக்கிறது என்பதுபற்றியும், மாணவர்கள் மனதில் ஆன்மீக நன்னெறி மதிப்பீடுகளை எவ்வாறு பதியவைப்பது என்பதுபற்றியும் நமது அப்யாசி சகோதரர்களால் ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஆசிரியப் பயிற்சி பெறும் 60 நபர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### மந்தமாரி, ஆந்திரப் பிரதேசம்

கிறிஸ்து மிஷனரியின் கார்மல் உயர்நிலைப்பள்ளி நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க 70 ஆசிரியர்களுக்கு ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏற்கனவே அப்யாசிகளாக இருந்த சில ஆசிரியர்கள் தியானத்தின் அவசியம் பற்றியும், தங்களின் சொந்த அனுபவங்களைப் பற்றியும் பேசினார்கள். பள்ளியின் அறிவிப்புப் பலகையில் நம் மிஷனின் பிரார்த்தனை இடம் பெற்றிருந்தது.



### வடோதரா, குஜராத்

ஜூலை 6 2008, ஞாயிறு அன்று, 90 ஆசிரியர்களுக்கும், இதர விருந்தினர்களுக்கும் அல்காபுரியில் பரோடா உயர்நிலைப்பள்ளி கலை அரங்கத்தில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. வாழ்க்கையில் ஆன்மீகத்திற்கான தேவை, தியானத்திற்கான இடம், சகஜ மார்க்க பயிற்சியின் சிறப்பு அம்சங்கள், மனித மனதின் மீது அது ஏற்படுத்தும் விளைவுகள் ஆகியவற்றைப் பற்றிய சொற்பொழிவுகள் இடம் பெற்றன. கடைசியாக சகஜ மார்க்கப் பயிற்சியின் மூலம் அவரவர் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தின் அனுபவங்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

### குல்பர்கா கிராமப்புறத்தில் தொடக்கப்பணிகள்



6 ஜூன் 2008 அன்று ஆய்நோலி கிராமத்தில் ஒரு அப்யாசியின் வீட்டு மாடியில் ஒரு எளிய கூட்டம் நடத்தப்பட்டது. 25 நபர்கள் அதில் கலந்து கொண்டனர். சகஜ மார்க்கத்தைப் பற்றிய சொற்பொழிவுகளுக்குப் பிறகு அதன் பயிற்சிமுறையைப் பற்றிய கேள்விகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதே வட்டாரத்தில், கனகபுரா என்றகிராமத்தில், இரண்டாவது நிகழ்ச்சி ஒன்று, ஒரு அப்யாசியின் வீட்டில் நடத்தப்பட்டது. அதில் 35 நபர்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக இவ்விரு கூட்டங்களும் கிராமப்புறபின்னணியிலேயே நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. சகஜ மார்க்கம் எளிமையான முறையிலும் தெள்ளத் தெளிவாகவும் விளக்கப்பட்டது. அது, பார்வையாளர்களை, தங்களது தற்போதைய பயிற்சிகளை மறு ஆலோசனை செய்யத் தூண்டியதாகத் தெரிகிறது.

### கொடைக்கானல், தமிழ்நாடு

கொடைக்கானல் தமிழ்நாட்டின் ஒரு மலை வாசஸ்தலம். அது மதுரையின் கிளை மையமாகும். மதுரையிலுள்ள பிரசெப்டர்கள் இப்பகுதியில் மிஷனை வளரச் செய்ய முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். பவன்ஸ் காந்தி வித்யாஸ்ரமப் பள்ளியில், 12 ஜூலை 2008 அன்று சகஜ மார்க்கத்தைப் பற்றி 25 ஆசிரியர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அப்பள்ளியின் முதல்வர் தியானத்தை ஆரம்பிக்க விரும்புவர்களுக்கு அதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதாக உறுதியளித்தார். சகோ. ராமநாதன் என்றபிரிசெப்டரும் கொடைக்கானலில் உள்ள சகோ. சந்திர பிரசாத் என்றஅப்யாசியும் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, கொடைக்கானல், நமது மிஷனை வரவேற்று 20 ஆசிரியர்களுக்காக ஒரு வரவேற்புக் கூட்டத்தை 8 ஆகஸ்ட் 2008 அன்று நடத்தியது. சகஜ மார்க்கப் பயிற்சியைப் பற்றிய விரிவான சொற்பொழிவிற்குப் பிறகு, பள்ளி முதல்வர் உட்பட 13 ஆசிரியர்கள் ஆரம்ப தியான அமர்வுகளை எடுத்துக்கொள்ள தங்களின் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

### சிலிகுரி மேற்கு வங்காளம்

சிலிகுரி மற்றும் ஜல்பாய்குரி அப்யாசிகள், 8 ஜூன் 2008 அன்று ஜல்பாய்குரி ஜில்லா பரிஷத் கலை அரங்கத்தில் ஒரு வரவேற்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். உள்ளூர் நர்ஸரி பள்ளி மாணவர்களின் இசை நாட்டியத்துடன் நிகழ்ச்சி ஆரம்பித்து, பிரிசெப்டர்களின் சொற்பொழிவுகளுடன், பவர் பாயிண்ட் மூலம் விளக்கமும் அளிக்கப்பட்டது. 35 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். பலர் மார்க்கத்தைப் பற்றி இன்னும் அதிகம் தெரிந்துகொள்ள ஆவல் காட்டினர்.

# ஆன்மீக ஒளி மையம்

## அகமதாபாத் ஆசிரமம்

அகமதாபாத் காந்திநகர் நெடுஞ்சாலை வழியாகச் செல்லும் ஒருவர், புதிதாகக் கட்டப்பட்டுள்ள அகமதாபாத் ஆசிரமத்தைக் காணாதிருக்க முடியாது. நம் மாஸ்டர் அகமதாபாத்திற்கு கடைசியாக வருகை புரிந்தபோது, அதைத் தொடங்கி வைத்தார்.

இந்தியாவிலுள்ள மிஷன்களில் அறுகோண வடிவில் அமைந்திருக்கும் தியான மண்டபங்களில் ஒன்றாக இருப்பது இதன் சிறப்பு அம்சமாகும். இது நவீனமயமாகவும், மிகவும் வசீகரமானதாகவும், சிறப்பாக செயல்படுவதாகவும் உள்ளது.

அகமதாபாத் மாநகரிலிருந்து 25 கி. மீ தூரத்தில் 4.75 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த ஆசிரம வளாகத்தில், தியான மண்டபம், மாஸ்டரது குடில், துயில் கூடங்கள், குடியிருப்பு வளாகங்கள், சமையலறை மற்றும் ஆசிரம அலுவலகம் என 5 பிரதான கட்டிடங்கள் உள்ளன.

### தியானமண்டபம்



தியானமண்டபம் வழக்கமான வடிவத்தில் அல்லாமல் பிரத்யேகமானதாக உள்ளது. அதன் மேற்கூரை சாய்மான வட்டவடிவில் மெல்லிய ஹை-பார் கான்கிரீட்டினால் அமைக்கப்பட்டுள்ளது. அது தூண்கள் இல்லாமல், விசாலமாக அறுகோண வடிவில் அமைந்துள்ளது, மாஸ்டர் அங்கு அமர்ந்திருக்கும்போது இடையூறு இல்லாமல் அவரைக் காண வசதியாக உள்ளது.

இந்த வடிவ அமைப்பால் பக்க வாட்டங்களிலிருந்து காற்று உச்சிக்கு இயல்பாக செல்கிறது. அதனால் கோடை உச்சத்திலும் மண்டபத்தில் வெப்பம் மிகவும் குறைவாகவே இருக்கிறது.

தியான மண்டபத்தில் 2000 அப்யாசிகள் அமரலாம். அவசியம் ஏற்படும்போது தியான மண்டபத்தின் இரு பக்கங்களிலும், மேலும் 500 அப்யாசிகள் அமர இட வசதி இணைக்கும் வாய்ப்புள்ளது.

### மாஸ்டரின் குடில்

மாஸ்டரின் குடில் மனதிற்கினிய வகையில் பாரம்பரியமான வடிவமைப்புடன் உள்ளது. அதில் மத்தியில் ஒரு தாழ்வாரம், அதைச் சுற்றி மாஸ்டரின் படுக்கையறையுடன் கூடிய ஒரு அலுவலக அறை, பகல் உபயோகத்திற்கான அறை, சமையல் அறை மற்றும் விருந்தினரின் படுக்கையறை ஆகியவை உள்ளன.

குடிலின் மேற்கூரை வித்தியாசமான விதத்தில் உட்புறம் மரமும் வெளிப்புறம் மங்களூர் ஓடுகளும் வேயப்பட்டு சரிவாக அமைக்கப்பட்டுள்ளது.

### துயில் கூடங்கள்

சம அளவிலான ஆறு தொகுதிகள் அடங்கிய இரு மாடிக்



கட்டிடங்களில் அமைந்துள்ள துயில்கூடங்களில், 750 அப்யாசிகள் தாராளமாக தங்க முடியும்.

துயில்கூடத்தின் ஒரு கோடியில் அப்யாசி மருத்துவர்களால் நடத்தப்படும் ஒரு சிறிய மருத்துவமனை அமைந்துள்ளது. அப்யாசிகள் மற்றும் சுற்றியுள்ள கிராமத்து மக்களின் தேவையை அது பூர்த்தி செய்கிறது.

ஆறு கட்டிடத் தொகுதிகளில் ஒன்று, ஒலிஒளி சாதனங்கள் பொருத்தப்பட்டு பயிற்சி முகாம்களும், கருத்தரங்குகளும் நடைபெற எப்போதும் தயாராக உள்ளது.

சமையலறை விஸ்தாரமாக உள்ளது. போதுமான அளவு உணவுப் பொருட்களை சேமித்து வைக்கவும் சமையல் பாத்திரங்களை கழுவவும் இடவசதியுள்ளது. சமையலறைக்கு மேலே ஆசிரம மேலாளரின் வீடும், நல்ல வசதிகளுடன் கூடிய அலுவலகமும் உள்ளது.

எல்' வடிவத்தில் உள்ள குடியிருப்பு வளாகத்தில், கீழ்தளமும், ஒருமாடி கட்டிடமும் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஆறு



குடியிருப்புகள் இரு படுக்கையறை வசதியுடனும், ஒன்பது குடியிருப்புகள் ஒரு படுக்கையறை கொண்டதாகவும் உள்ளன.

### எதிர்காலத் திட்டங்கள்

எதிர்காலத்தில், ஆசிரமத்தில், ஒரு சாப்பாட்டறை, குழந்தைகள் விளையாடுவதற்கான இடம், ஆசிரமத்தைப் பராமரிப்பவர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கென 4 குடில்கள், நிறைய புத்தகங்களைக் கொண்ட ஒரு நூலகம் கட்டப்பட உள்ளன. மேலும், மழைநீர் சேமிப்பு வசதிகள், புல்தரை மற்றும் மரங்கள் நடுதல் போன்றவற்றிற்கும் திட்டங்கள் உள்ளன.

மொத்தத்தில், இந்தியாவிலுள்ள மிஷன் ஆசிரமங்களிடையே அகமதாபாத் ஆசிரமம் நிச்சயமாக ஒரு சிறப்பான அணிகலனாகத் திகழும். மாஸ்டரின் அருளால் அது இந்தியாவின் இப்பகுதியிலுள்ள மனிதகுலத்திற்கு ஆன்மீக செல்வாக்கு மிகுந்த ஒரு வலுவான ஆதாரமாக இருக்கப் போவது உறுதி.

**To subscribe to this Newsletter please visit http://www.srcm.org/centers/as/in/newsletter/index.jsp**
**For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2008 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved.
"Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.
This message may be edited for content and is intended exclusively for the members of SRCM.